பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை –28.

# சுற்றறிக்கை

**ந.க.எண்.5775/சி1/2022, நாள்.15.02.2022**

பொருள்: சார்பதிவாளர்கள்/மாவட்ட பதிவாளர்கள் – பதிவு நடைமுறை, முத்திரைத் தீர்வை, சங்கங்கள், சீட்டுக்கள், திருமண பதிவு குறித்து பதிவுத்துறை தலைவரிடம் நேரடியாக தெளிவுரை கோருதல் – உரிய நடைமுறை வகுத்தளித்தல் – தொடர்பாக.

******

பதிவுத்துறை தலைவர் அலுவலகத்திற்கு சமீபத்தில் ஒரு மாவட்ட பதிவாளரால் நேரடியாக தெளிவுரை கோரி வரப்பெற்ற கடிதத்தினை பரிசீலிக்கும்போது அவர் எழுப்பிய கேள்விக்கு ஏற்கனவே சுற்றறிக்கை மூலம் தெளிவுரை வழங்கப்பட்ட நிலையில் அதனை பின்பற்றாது மாவட்ட பதிவாளர் தெளிவுரை கோரியது, தேவையற்ற கால தாமதம் ஏற்படுத்துவதாக கோரப்பட்டதாகவே கருதப்படுகிறது.

மேலும், சில சார்பதிவாளர்கள் மற்றும் மாவட்ட பதிவாளர்கள் பதிவு நடைமுறை, முத்திரைத் தீர்வை, சங்கங்கள், சீட்டுக்கள், திருமண பதிவு போன்றவை குறித்து பதிவுத்துறை தலைவர் அலுவலகத்திற்கு நேரடியாக தெளிவுரை கோருகின்றனர். உரிய சுற்றறிக்கைகள் அது குறித்து பிறப்பிக்கப்பட்டிருந்தும் தேவையில்லாமல் தெளிவுரைகள் கோரப்படுவதால், சம்பந்தப்பட்டவர்கள் இது குறித்து தெளிவுரை பெற பதிவுத்துறை தலைவர் அலுவலகத்திற்கு வரவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இதனை தவிர்க்கவும் உரிய தெளிவுரைகளை உடனுக்குடன் வழங்கி பதிவு பொதுமக்களுக்கு வழங்கும் சேவையின் தரத்தை உயர்த்தும் பொருட்டும் கீழ்க்கண்ட வழிமுறை வகுத்தளிக்கப்படுகிறது.

1. மாவட்ட பதிவாளர்கள் தங்களுக்கு ஏற்படும் நியாயமான, சட்பூர்வமான சந்தேகங்களை நிவர்த்தி செய்ய நேரடியாக தங்களின் துணை பதிவுத்துறை தலைவருக்கு தெளிவுரை கோரி கடிதம் அனுப்ப வேண்டும். துணை

பதிவுத்துறை தலைவர்கள் மாவட்ட பதிவாளர் கோரிய சந்தேகம் குறித்து உரிய சுற்றறிக்கை முன்பே பதிவுத்துறை தலைவரால் பிறப்பிக்கப்பட்டு இருப்பின் அல்லது அது குறித்து சம்பந்தப்பட்ட சட்டம், விதிகள், அரசாணை, பதிவுத்துறை தலைவரால் பிறப்பிக்கப்பட்ட தன்மை குறித்த ஆணைகளில் தெளிவுரை வழங்கப்பட்டு இருப்பின் அதில் உள்ளவற்றை எடுத்துக்கூறி உரிய தெளிவுரை சம்பந்தப்பட்ட மாவட்ட பதிவாளருக்கு வழங்க வேண்டும்.

2. மாவட்ட பதிவாளர் கோரும் சந்தேகத்திற்கு மேற்கண்டவற்றிலிருந்து உரிய தெளிவுரை வழங்க இயலாத நிலை இருப்பின் மாவட்ட பதிவாளரின் கோரிக்கை குறித்து தங்களின் பரிந்துரையுடன் உடன் பதிவுத்துறை தலைவருக்கு துணை பதிவுத்துறை தலைவர்கள் அனுப்ப வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

3. சார்பதிவாளர்களால் தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை சம்பந்தப்பட்ட மாவட்ட பதிவாளர்களிடம் கோர வேண்டும். மாவட்ட பதிவாளர் மேற்கண்ட சார்புதிவாளர் கோரிய சந்தேகம் குறித்து உரிய சுற்றறிக்கை முன்பே பதிவுத்துறை தலைவரால் பிறப்பிக்கப்பட்டு இருப்பின் அல்லது அது குறித்து சம்பந்ததப்பட்ட சட்டம், விதிகள், அரசாணை, பதிவுத்துறை தலைவரால் பிறப்பிக்கப்பட்ட தன்மை குறித்த ஆணைகளில் தெளிவுரை வழங்கப்பட்டு இருப்பின் அதில் உள்ளவற்றை எடுத்துக்கூறி உரிய தெளிவுரை சம்பந்தப்பட்ட சார்பதிவாளருக்கு வழங்க வேண்டும். சார்பதிவாளர் கோரும் சந்தேகத்திற்கு மேற்கண்டவற்றிலிருந்து உரிய தெளிவுரை வழங்க இயலாத நிலை இருப்பின் சார்பதிவாளரின் கோரிக்கை குறித்து தங்களின் பரிந்துரையுடன் உடன் துணைபதிவுத்துறை தலைவருக்கு மாவட்ட பதிவாளர்கள் அனுப்ப வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

4. சார்பதிவாளர்களோ, மாவட்ட பதிவாளர்களோ தங்களுக்கு சந்தேகம் ஏதும் இருப்பின் அது குறித்து ஒரு வாரத்திற்குள் சம்பந்தப்பட்ட மாவட்ட பதிவாளர்/துணை பதிவுத்துறை தலைவருக்கு தெளிவுரை கோரி கடிதம் அனுப்ப வேண்டும். இவ்வாறு தெளிவுரை கோரி பெறப்பட்ட கடிதத்திற்கு சம்பந்தப்பட்ட மாவட்ட பதிவாளர்/துணை பதிவுத்துறை தலைவர் 15 நாட்களுக்குள் உரிய தெளிவுரை வழங்க வேண்டும். துணை பதிவுத்துறை தலைவர்/பதிவுத்துறை தலைவருக்கு தெளிவுரை கோரி கடிதம் அனுப்ப

Verified RealEstate™

வேண்டிய நிலை இருப்பின் இக்கடிதமும் 15 நாட்களுக்குள் அனுப்பப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

5. மேலும், ஆவணத்தின் தன்மை குறித்து இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 56(2)-ன் கீழ் கோரப்படும் தெளிவுரை குறித்தும் மேற்கண்ட நடைமுறையே பின்பற்றப்படவேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சுற்றறிக்கை பெற்றதற்கான ஒப்புதலை அனைத்து சார்பதிவாளர்களிடமிருந்து மாவட்ட பதிவாளர்களும் மாவட்ட பதிவாளர்களிடமிருந்து துணை பதிவுத்துறை தலைவர்களும் பெற்று கோர்வை செய்துகொள்ள அறிவுறுத்தப்படுகின்றனர். துணை பதிவுத்துறை தலைவர்கள் தங்களின் ஒப்புதலை பதிவுத்துறை தலைவருக்கு அனுப்ப கோரப்படுகின்றனர்.

ஒம்/-15.02.2022
பதிவுத்துறை தலைவர்

/ஆணையின்படி/

கூடுதல் பதிவுத்துறை தலைவர்
(முத்திரை மற்றும் பதிவு)

பெறுநர்:

அனைத்து துணைப் பதிவுத்துறைத் தலைவர்கள்.
அனைத்து மாவட்டப் பதிவாளர்கள்.
அனைத்து பதிவு அலுவலர்கள்.

நகல்:

1. முதுநிலை நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள்,
தலைமைச் செயலகம், சென்னை-9.

2. அரசு செயலாளர்,
வணிகவரி மற்றும் பதிவுத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.

Verified RealEstate ™

3. இயக்குநர்,
பதிவுத்துறை பயிற்சி நிலையம்,
சென்னை-14.

4. அனைத்து உயர் அலுவலர்கள் மற்றும் கண்காணிப்பாளர்கள்,
பதிவுத்துறை தலைவர் அலுவலகம்,
சென்னை - 28.

Verified RealEstate ™

[redacted]